கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., நேற்று முன்தினம் நாகர்கோவில் மாநகர தி.மு.க செயலாளர் ப.ஆனந்தின் தந்தை என்.பரமணிதாஸ் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து, அவரது இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சாருமதி மற்றும் செழியன் ஆகியோர்களின் உடலுக்கு நேற்று (08-07- 2025) அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் மற்றும் ஆறுதலையும் தெரிவித்ததோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 லட்சத்திற்கான காசோசலையினை வழங்கினார். மேலும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்டு, ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் . உட்பட பலர் உள்ளனர்.

மாநிலங்களவை தேர்தலில் போட்டியின்றி தேர்வான

தி.மு.க. எம்.பி.க்கள் ஜூலை 25 ஆம் தேதி பதவியேற்பு!

சென்னை, ஜூலை 9-

மாநிலங்களவை தேர்தலில் போட்டியின்றி தேர்வு செய்யப் பட்ட தி.மு.க. எம்.பி.க்கள், வரும் 25 ஆம் தேதி பதவியேற்க உள் ளனர்.

தமிழ்நாட்டில் இருந்து 6 மாநி லங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. தி.மு.க. சார்பில் போட்டியிட்ட பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங் கம், கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப் பட்டனர். இதேபோன்று, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹா சனும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், மாநிலங் களவை எம்.பி.க்களாக போட்டி யின்றி வெற்றி பெற்ற 4 பேரும் ஜூலை 25 ஆம் தேதி பதவி யேற்கின்றனர். மாநிலங்க ளவை தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

உடன்பிறப்புகளைப் போலவே

எனக்கும் புது உற்சாகம் பிறக்கிறது!

'உடன்பிறப்பே வா!' – கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஜூலை 9-

'உடன்பிறப்பே வா!' - கழக நிர்வா கிகளுடனான சந்திப்பு குறித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மனந்திறந்த உரையாடல்களால் உடன்பிறப்புகளைப் போலவே எனக் கும் புது உற்சாகம்பிறக்கிறது!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கழகத்தின் இரத்த நாளங்களான நிர்வாகிகளுடன் frank & open hearted உரையாடல்களை #உடன்பி றப்பே_வா சாத்தியப்படுத்தியுள்ளது! மனந்திறந்த உரையாடல்களால் உடன்பிறப்புகளைப் போலவே எனக் கும் புது உற்சாகம் பிறக்கிறது. #களம்2026 குறித்த நம்பிக்கை பன்மடங்கு பெருகுகிறது.

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமை! எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

பெரம்பலூர் - குன்னம் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்!

அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை! அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை 7-

பெரம்பலூர் மாவட்டத் தில் உள்ள பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில், "ஓரணியில் தமிழ்நாடு" எனும் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி, பாக நிலை முகவர்கள், பாக நிலை டிஜிட்டல் முக வர்கள், (BLA2,BDA) மற்றும் கிளைச்செயலாளர்கள் ஆய் வுக்கூட்டம், ஜே.கே.திரு மண மண்டபத்தில் மாவட்ட கழக பொறுப்பா ளர் வீ.ஜெகதீசன் தலைமை யில், சட்டமன்ற உறுப்பி னர் எம்.பிரபாக ரன் முன்னிலையில் நடைபெற் றது.

இதில் நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சரும் - மண்டல பொறுப்பாளரு மான அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு, 2026-ஆம் ஆண்டு மு.க.ஸ்டா லின் அவர்கள் மீண்டும் முதல மைச்சராக பதவியேற்க வேண்டும் என்று பேசினார் கள்.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள பாக நிலை முகவர்கள் (BDA) 332 பேருக்கும், குன்னம் சட்ட மன்ற தொகுதியில் உள்ள பாக நிலை முகவர்கள் (BDA)207 பேர் என மொத் தம் 539 பேருக்கும் (செந் துறை நீங்கலாக) டிஜிட்டல் முறையில் உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக, அமைச்சர் சா.சி.சிவசங்கர் தனது சொந்த செலவில் வாங்கித் தந்த 539 செல்போன்களை கே.என்.நேரு பாக நிலை முகவர்களிடம் வழங்கி னார்.

இதில் பெரம்பலூர் சட் டமன்ற தொகுதி பார்வை யாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில ஆதிதி ராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன் னம் சி.ராஜேந்திரன், தலை மைச் செயற்குழு உறுப்பி னர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்தி ரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, ஜூலை 9-

தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டி யலில் தமிழ்நாடு முதலி டத்தில் உள்ளதாக தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமி தம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பக் கத்தில் கூறியதாவது, தி எகனாமிஸ்ட் இன்டலி ஜென்ஸ் யூனிட் அதன் 2025-2029 மாநில வாரி யான வணிக சுற்றுச்சூழல் தரவரிசையை வெளியிட் டுள்ளது. இங்கு வணிக நட்பு சூழல், தொலை நோக்கு தலைமை, பய னுள்ள கொள்கை மற்றும் இடைவிடாத செயல்படுத் தல் ஆகியவை ஒன்றி ணைந்துள்ளது.

உலகளாவிய ஆட்டோ ஜாம்பவான்கள் முதல் மின்சார வாகன நிறுவனங் கள் வரை, பொறியியல் ஜாம்பவான்கள் முதல் மின்னணு நிறுவனங்கள் வரை,உலகளவில் பல் வேறு தொழில் முதலிட் டாளர்கள் தமிழ்நாட்டை தேர்வு செய்கின்றனர். ஏனெனில் இங்கு வெற்றி பெறுவது எளிது மற்றும் எளிதானது.

திராவிட மாடல் ஆட்சி யில் தொழில்துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்கு கிறது. தமிழ்நாட்டின் வர லாற்றில் இதற்கு முன் ஒரு போதும் எங்கள் HCM இன் தலைமையில் இந்த பரு வத்தில் இதுபோன்ற தொடர்ச்சியான உலகளா வ்ய பாராட்டைப் பெற்ற தில்லை, உலகம் முழுவ தும் தமிழ்நாட்டை பிராண்ட் ஆக காண்பிப்ப தில் செய்த பணி குறித்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.

கடந்த ஆட்சியில் இல் லாத அளவுக்கு தமிழ்நாட் டில் தொழில் தொடங்க பெரும் வரவேற்பு கிடைத் துள்ளது. குஜராத், மராட் டியம் மாநிலங்கள் பட்டி யலில் 2 மற்றும் 3வது இடத்தில் உள்ளன.

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அழைப்பு!

இந்தியாவில் தொழில் தொடங்க சாதகமான சூழல் உள்ள மாநிலங் களில் தமிழ்நாடு முதலி டத்தில் இருப்பது, திரா விட மாடல் ஆட்சியின் சாதனைக்கான மற்றொரு நிரூபணம் என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித் துள்ளார்.

தொழில் தொடங்க ஏது வான நிலையை உருவாக் கியது, தொலைநோக்கு பார்வை கொண்ட தலை மைப் பண்பு, அனைவருக் குமான கொள்கை மற்றும் இடைவிடாத உழைப்பு ஆகியவை இணைந்த திரா விட மாடல் அரசின் நட வடிக்கைக்கு கிடைத்த வெற்றி என்று அவர் தெரி வித்துள்ளார்.

சர்வதேச வாகன நிறுவ னங்கள் முதல் மின்சார வாகன நிறுவனங்கள் வரை, பொறியியல் பெரு நிறுவனங்கள் முதல் மின் னணு நிறுவனங்கள் வரை என உலகம் முழுவதும் உள்ள நிறுவனங்கள் தமிழ் நாட்டை நோக்கி வந்துள் ளனர். இங்கு அவர்களுக்கு தேவையான வெற்றி கிடைக்கிறது என்றும் தெரிவித்துள்ள டி.ஆர். பி.ராஜா, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமை யிலான ஆட்சியில் பல் வேறு சாதனைகளை படைக்கும் அரசுக்கு உல களவில் பாராட்டுகள் தொடர்ந்து கிடைத்து வரு கிறது என்றும் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

உலகமுதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாடு வருகை தந்து, தமிழ்நாடு உடன் வளருங்கள் என் றும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அழைப்பு விடுத்துள் ளார்.

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தை நிறைவேற்றக் காரணமாயிருந்த

பெருந்தலைவர் காமராசர் - வி.கே.பழனிசாமி கவுண்டர் - சி.சுப்பிரமணியம் - பொள்ளாச்சி நா.மகாலிங்கத்திற்கு திருவுருவச் சிலையுடன் நினைவு அரங்கம்!

பணிகளை - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

பொள்ளாச்சி, ஜூலை 9-

கோயம்புத்தூர் மாவட் டம், பொள்ளாச்சி, நீர்வளத்துறையின் கண்கா ணிப்புப் பொறியாளர் அலுவ லக வளாகத்தில் பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தினை நிறைவேற்றக் காரணமாகயி ருந்த பெருந்தலைவர் கு.காம ராஜர் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிச் சாமி கவுண்டர். முன்னாள் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற் றும் தொழிலதிபர் பொள் ளாச்சி நா.மகாலி ங்கம், ஆகி யோர்களுக்கு திருவுருவச் சிலையுடன் நினைவு அரங்கம் அமைக்கும் பணிகள் நடை பெற்று வருவதை நேற்று (08.07.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச் சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார். இந்த ஆய்வின் போது பொள்ளாச்சி நாடாளு மன்ற உறுப்பினர் க. ஈஸ்வரசாமி, மாவட்ட ஆட் சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொள் ளாச்சி நகர்மன்ற தலைவர் திருமதி.சியாமளா நவநிதிகி ருஷ்ணன்; பொதுப்பணித் துறை (கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) செயற் பொறியாளர் செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

இதில் அமைச்சர் மு. பெ.சாமிநாதன் தெரிவித்ததா வது:-

மிகப்பெரிய பாசனத்திட் டங்களில் ஒன்றான பரம்பிக் குளம் ஆழியார்பாசனத் திட் டம் உருவாக்கப்பட்டபோது பொறுப்பில் இருந்த தலைவர் களான அன்றைக்கு முதல மைச்சராக இருந்த பெருந்த லைவர் காமராசர் , ஒன்றிய முன்னாள் அமைச்சர் சி.சுப்பி ரமணியம் , முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி. கே.பழனிச்சாமி கவுண்டர் , பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோருக்கு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவுருச்சிலையும், அரங்க மும், கட்டப்பட்டு வரு கின்றன.

இந்த அரங்கத்தின் கீழ்த ளம் விவசாயிகள் கருத்தரங்கு கள் நடத்துவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேல்தளத்தில் ஆழியாறு பாசன திட்டம் குறித்து இளைய சமூகத்தினர், விவசா யிகள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்ப டவுள்ளது. இத்திட்டத்தற் கான மதிப்பீடு ரூ.4.28 கோடி ஆகும். ஆழியாறு பாசனத் திட்டம் மிக முக்கியமான திட் டமாகும். இப்பகுதி மக்களின் உயிர்நாடியாக இருக்கின்றது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று ஆய்வு செய் யப்பட்டது. இப்பணிகள் விரைந்து முடிவுற்று பயன் பாட்டிற்கு கொண்டுவரப்ப டும்.

மேலும், இத்திட்டம் உரு வாக காரணமாக இருந்த இவர்கள் அனைவரையுடைய தி ரு வு ரு வ ச் சி ல ை க ளு ம் அமைக்கப்பட்டு, ஆழியார் தினத்தன்று அன்னார்களது திருவுருவச் சிலைகளுக்கு அர சின் சார்பில் மாலை அணி வித்து மரியாதை செலுத்த அர சாணை வெளியிடப்ப ட்டுள்ளது.

மேலும், அதே நாளில் ஏற் கனவே வால்பாறையில் அமைக்கப்பட்டுள்ள ராவ் அவர்களின் சிலைக்கும் மாலை அணி வித்து மரி யாதை செய் ய ப் ப டு ம் . மே லு ம் , பி.ஏ.பி. கால் வாய் திட்டத் தி ன்போது உ யி ரி ழ ந் த வ ர் க ளு க் கான மணி ம ண் ட மு ம் கட்டப்பட்டு வருகின்றது. இந்த மணி மண்டபம் அமைக்கும் பணிக ளும் விரைவில் கட்டிமுடிக்கப் பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு த அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித் தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா:

மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி - ஏ.எம்.வி.பிரபாகரராஜா பங்கேற்பு

சென்னை, ஜூலை 9 -

சென்னை தெற்கு மாவட் டம், மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் தமிழின தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு கால சாதனை விளக்க தெருமுனை பொதுக் கூட்டம் நிகழ்ச்சி வார்டு150, காரம்பாக்கம், சுபம் காம்ப்ளக்ஸ் அருகில் 09.07.2025 புதன்கிழமை மாலை 5.00 மணி யளவில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நரேன் கணபதி தலைமையில், மாவட்ட இளை ஞர் அணி துணை அமைப்பா ளர்கள் செ.ரவி, ச.சங்கர்க ணேஷ்,எம்.சி., ஆகியோர் முன்னிலையில், வட்ட கழக செயலாளர்கள் சி.சுந்தர், எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ. மோசஸ், ஜெ.பாஸ்கரன் (பொறுப்பாளர்), தி.சார்லஸ், ஆ.செல்வம், மாவட்ட பிரதிநி திகள் க.கைலாசம், இரா. ராஜேந்திரன், மாமன்ற உறுப்பி னர்கள் ஹேமலதாகணபதி,எம். சி., செல்விரமேஷ், எம்.சி., சாந் திஇராமலிங்கம், எம்.சி., ஆகி யோர் வரவே ற்புரையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திராவிட கழகம், திருமதி. வழக்கறிஞர். அருள்மொழி, தலைமை கழக பேச்சாளர்கள் திருமதி. அறிவு மதி அன்பரசு, திருமதி.அ. தஸ் னீம்பானு, மாவட்ட செயலா ளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன், பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் திரு மிகு.க.கணபதி, எம்.எல்.ஏ. மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபா கரராஜா,எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம் பூர் வே.ராஜன்,எம்.சி., வில்லி வாக்கம் தெற்கு ஒன்றிய செய லாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, தொகுதி மேற் பார்வையாளர் பி.டி.பாண்டி செல்வம், மாநில தகவல் தொழில் நுட்ப பிரிவு துணை செயலாளர் எஸ்.பத்மபிரியா, தலைமை செயற் குழு உறுப்பி னர் எஸ்.அருணாசலம், தலைமை பொது குழு உறுப்பி னர்கள் இராமாபுரம் வ.செல்வ குமார், எம்.சி., வீர. கனிமொழி, மாவட்ட அமைப்பாளர்கள் வி,ராஜேஷ், அ.விஜயபாலா, பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ். பாரதி, எம்.சி., கே.ராஜீ, எம்.சி., மு.மா.வ.து.அ. எஸ்.பாலமுரு கன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, ஜெ.இ.பா ண் டியன், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், கா.வீ.தியா கராஜன், மதுரவாயல் தெற்குப் பகுதி அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி. நல்லதம்பி, ஜி.மன்மதராஜ், மா. பா.சித்ராலயம், ஜெ.ஏ.துரை, அ.கவுஸ்பாஷா, லயன் த.பாலாஜி, ஆர்.கருணாகரன், தினகரன் சண்முகம், எஸ். ஷகிலா, கே.சரவணன், செஞ்சி கார்த்திக், சு.டேவிட்ராஜ், தினேஷ், எம்.ஏ.வி.சீனிவாசன், மருத்துவர் முபாரக், எல்.டி. என்.சரவணன், எல்.மகேஷ்கு மார், ஆர்.டி.பாஸ்கரன், பி. மோகன், அ.ராகேஷ், பி.கே. சண்முகம், எஸ்பரணி, கே.தெய் வசிகாமணி, வி.திலகவதி, பி.பிரியா, எம்.எல்.நாதன், வி.விஜயன், ஆர்.சேகர், எஸ். ரவி, ஏ.டி.எத்திராஜ், ஜி.ராமகி ருஷ்ணன், கே. நாராயணன், எஸ்.திருநாவுக்கரசு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்..

ஆர்.தியாகராஜன், டி.ஆர். விஜய், டி.ராஜேஷ், இரா.பா. உதயகுமார், டி.நரேஷ்குமார், இ.செந்தில்குமார், க.மூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முதல்வரின் செயலாளர் எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ். தாயார்

திருமதி எம்.எஸ்.ராஜலட்சுமி அம்மையார் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 9-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயலாளர் எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ். அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட் சுமி அம்மாள் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

என்னுடைய செயலாளராக உள்ள சண் முகம் ஐ.ஏ.எஸ் அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேத னையும் அடைந்தேன்.

பெற்ற அன்னையின் மறைவு என்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அத்தகைய பேரன்பை இழந்து தேற்ற முடியாத துயரில் வாடும் சண்முகம் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்க ளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள், அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECTS DEPARTMENT

S. P. D. C. No. B1 / 0889 / 2025

e-TENDER NOTICE

e-TENDER is invited for the following work in Two Cover System as per details furnished below.

Supply, Installation and Maintenance of 16 Stem Visualizer enabled Smart Class Room Solutions for Chennai Schools under CITIIS Challenge Initiative Work Value of Rs. **48,00,000/-** (inclusive of GST @ 18%)- E.M.D. Rs. **48,000/-**	
Tender document will be available in website: **https://tntenders.gov.in**	
EMD Amount through online net banking transaction on e-tender portal only.	
Tender last date and time of submission	: **24.07.2025** up to **3.00 p.m.**
Tender opening date and time	: **25.07.2025** at **3.00 p.m.**

DIPR / 3511 / Tender / 2025

Superintending Engineer (Special Projects)